# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் : 09 | இஸ்லாம் | நேரம் : |
| --- | --- | --- |
| | சுட்டெண் ................................................ | 2 மணி |

## பகுதி - I

♦ **மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

01) "மஹப்பதுர் ரஸூல்" எனப்படுவது
1. அல்லாஹ்வை நேசித்தல் 2. உயிரினங்களைப் பாதுகாத்தல்
3. நபி(ஸல்) அவர்கள் மீது அன்பு வைத்தல் 4. மலக்குகளை நேசித்தல்

02) மறுமையில் அனைவருக்காகவும் அல்லாஹ்விடம் ஷபாஅத் செய்யும் அங்கீகாரம் பெற்றவர்.
1. ஜிப்ரீல் (அலை) 2. மீக்காயீல் (அலை) 3. முஹம்மது (ஸல்) 4. மாலிக் (அலை)

03) மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதம் எது?
1. தவ்றாத் 2. இன்ஜீல் 3. ஸபூர் 4. புர்க்கான்

04) "முஃஜிஸாத்" எனப்படுவது
1. வேதங்கள் 2. அற்புதங்கள் 3. ஏடுகள் 4. சுவனம்

05) ஈஸா (அலை) அவர்களின் தாய்
1. ஹலீமா 2. ஹாஜர் 3. மர்யம் 4. ஆமினா

06) "உம்மஹாத்துல் முஃமினீன்" எனப்படுவோர் யாவர்?
1. நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினர் 2. வெற்றி பெற்ற மங்கையர்கள்
3. நரகத்தின் மாதுக்கள் 4. விசுவாசிகளின் அன்னையர்

07) நபி (ஸல்) அவர்கள் ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி) அவர்களை எத்தனையாம் ஆண்டு திருமணம் செய்தார்கள்
1. ஹிஜ்ரி 2 2. ஹிஜ்ரி 3 3. ஹிஜ்ரி 4 4. ஹிஜ்ரி 5

08) "மார்க்க விடயங்களில் ஸைனபை விடவும் சிறந்த ஒரு பெண்ணை நான் கண்டதில்லை. அவர் மிகவும் இறையச்சமுடையவர்...." எனக் கூறியவர்
1. கதீஜா (ரழி) 2. ஆயிஷா (ரழி) 3. முஹம்மது (ஸல்) 4. மய்மூனா (ரழி)

09) "அல்பாதிஹ்" என்பதன் பொருள்
1. ஞானி 2. அறிவாளி 3. வீரன் 4. வெற்றியாளர்

10) பின்வருவனவற்றுள் ஹலாலான வகையுள் அடங்குவது
1. பன்றியிறைச்சி 2. மதுபானம் 3. விபச்சாரம் 4. மீன்

11) "உங்களுக்கும் உங்கள் மார்க்கம்; எனக்கு எனது மார்க்கம்" எனும் கூற்று
1. நபி (ஸல்) அவர்களின் கூற்று 2. அறிஞர்களின்கூற்று
3. அல்குர் ஆனின் கூற்று 4. ஆயிஷா (ரழி) அவர்களின் கூற்று

12) மகாமாயா தேவியின் குழந்தையின் பெயர்
1. சித்தார்த்தன் 2. சுத்தோதனன் 3. மகிந்தன் 4. மாயாதுன்னை

13) "சனாதன தர்மம்" எனும் பெயரை உடைய சமயம்
1. இந்து சமயம் 2. இஸ்லாமிய சமயம்
3. பௌத்த சமயம் 4. கிறிஸ்தவ சமயம்

14) சைவக் கோயில்களில் தினமும் எத்தனை காலங்களில் வழிபாடு நடைபெறும்?
1. 3 காலங்கள் 2. 4 காலங்கள் 3. 5 காலங்கள் 4. 6 காலங்கள்

15) கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் விழா அல்லாதது
1. உயிர்த்த ஞாயிறு 2. பொசன் 3. பெரிய வெள்ளி 4. நத்தார்

16) நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி அருளப்பட்ட போது எதிர்வு கூறிய அறிஞர்
1. முஸைலமா 2. வரகத் பின் நௌபல் 3. இப்னுபதூதா 4. உஸைல் கிப்பாரி

17) "தேசப்பற்றும் தேசிய உணர்வும் இருப்பதால் தான் நாடுகள் வளமாக்கின்றன" எனக் கூறியவர்
1. அலி (ரழி) 2. உமர் (ரழி) 3. முஹம்மத் (ஸல்) 4. அபூபக்ர் (ரழி)

18) "யர்முத் தர்வியா" எனப்படுவது
1. துல்ஹஜ் எட்டாம் நாள் 2. துல் ஹஜ் ஒன்பதாம் நாள்
3. துல் ஹஜ் பத்தாம் நாள் 4. துல் ஹஜ் பதினொராம் நாள்

19) "ஸஹீஹ் புஹாரி" யில் உள்ளடங்கும் ஹதீஸ்களின் எண்ணிக்கை
1. 4800 2. 4000 3. 7275 4. 4341

20) "ஜாமி உல் குர்ஆன்" என அழைக்கப்பட்ட கலீபா யார்?
1. உமர் (ரழி) 2. உஸ்மான் (ரழி) 3. அபூபக்ர் (ரழி) 4. அலி (ரழி)

(20x2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

♦ **1ம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) 1. தவ்ஹீத் உள்ளடக்கும் மூன்று பகுதிகளும் எவை?
2. மறுமை பற்றிய நம்பிக்கை இல்லாத ஒருவரிடம் காணப்படும் பண்புகள் மூன்றைத் தருக?
3. 1. மஹ்ஷர் a. நீர்த்தடாகம்
2. ஹவ்லுல் கவ்ஸர் b. விசாரணை
3. ஹிஸாப் c. திறந்த வெளி - சரியானதைப் பொருத்துக
4. சுவனத்தின் பெயர்கள் மூன்றை எழுதுக. (4x3 = 12 புள்ளி)

02) 1. ஹதீஸ் துறை இமாம்கள் மூவரின் பெயர்களைத் தருக
2. நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜதுல் விதாவில் வலியுறுத்திய விடயங்கள் நான்கைத் தருக?
3. நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு வைக்க வேண்டும் என்பதற்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (3+4+5+ = 12 புள்ளி)

03) 1. மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள் இரண்டையும் ஈஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள் மூன்றையும் தருக
2. ஈஸா (அலை) அவர்களுக்குப் பின் நபியாக வந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள் என எழுதுக.
(10+2 = 12 புள்ளி)

04) 1. உம்மஹாத்துல் முஃமினீன்களில் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. "உம்முல் மஸாகீன்" என்று புகழ்துரைக்கப்பட்ட நபி(ஸல்) அவர்களின் மனைவி யார்?
3. ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) அவர்களிடம் காணப்பட்ட நற்குணங்கள் நான்கைத் தருக.
(6+2+4 = 12 புள்ளி)

05) 1. இஸ்லாமிய வரலாற்றில் புகழ் பெற்ற வீரத்தியாகிகள் இருவரைக் குறிப்பிடுக.
2. அல் பாதிஹ் அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்த மொழிகள் நான்கைத் தருக?
3. தளபதி ஸுசல்தானிடம் காணப்பட்ட மனித நேயப் பண்புகள் மூன்றைத் தருக. (2+4+6 = 12 புள்ளி)

06) 1. சிக்கனம் என்றால் என்ன?
2. ஹலால், ஹராம் எனும் பதங்களை விளக்குக?
3. சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் இரண்டைக் குறிப்பிடுக.
4. மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள் என்பதை வலியுறுத்தும் ஹதீஸ்கள் இரண்டைத் தருக.
(2+2+4+4 = 12 புள்ளி)

07) 1. இலங்கையில் உள்ள சமயங்கள் நான்கைக் குறிப்பிடுக.
2. "ஸம்மா ஸம்புது ரஜானன்" எனும் பெயரால் அழைக்கப்பட்டவர் யார்?
3. இந்து சமயத்தவரால் கொண்டாடப்படும் விழாக்கள் இரண்டைத் தருக.
4. உரோமர்கள் இயேசுவிற்கு வழங்கிய தண்டனைகள் இரண்டைக் குறிப்பிடுக.
(4+2+2+4 = 12 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

**இஸ்லாம்** **தரம் : 09**

## விடைகள்

### பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| 01) 3 | 02) 3 | 03) 1 | 04) 2 |
| 05) 3 | 06) 4 | 07) 2 | 08) 2 |
| 09) 4 | 10) 4 | 11) 3 | 12) 1 |
| 13) 1 | 14) 4 | 15) 2 | 16) 2 |
| 17) 2 | 18) 1 | 19) 3 | 20) 2 |

### பகுதி - II

01) 1. a. தவ்ஹீத் ருபூபிய்யத் b. தவ்ஹீத் உலூஹிய்யத்
c. அஸ்மா வஸ்ஸிபாத்
2. பொய், சுயநலம், துரோகம் (பொருத்தமான விடைகள்)
3. 1 - c 2 - a 3 - b
4. ஜன்னதுல் பிர்தவ்ஸ், ஜன்னதுல் மஃவா, ஜன்னதுல் அத்ன் தாருல் ஹுலூத்

02) 1. இமாம் புஹாரி (ரஹ்), இமாம் முஸ்லிம் (ரஹ்) இமாம் அபூதாவூத் (ரஹ்)
2. 1. இணை வைப்பில் இருந்து விலகி அல்லாஹ்வை மாத்திரம் அடி பணிதல்
2. மனிதர்களிடையே சமத்துவம் பேணப்பட்ட வேண்டும்
3. வட்டியுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்
4. பெண்களை மதித்து அவர்களது உரிமைகளைப் பேண வேண்டும்
3. 1. நபி (ஸல்) அவர்கள் உலக மக்கள் அனைவருக்கும் அருட் கொடையாக இருந்தமை
2. நபி (ஸல்) அவர்கள் தம் உம்மத்தினரை அதிகமாக நேசித்தமை (பொருத்தமான விடைகளுக்கு புள்ளி வழங்கவும்)

03) 1. மூஸா (அலை) - கைகள் பிரகாசித்தமை
கைத்தடி பாம்பாக மாறியமை
ஈஸா (அலை) - மரணித்தவர்களை உயிர்ப்பித்தல்
பிறவிக்குருடர்களையும், குஷ்டரோகிகளையும் குணப்படுத்தல்
வீட்டில் மறைவாக வைக்கப்பட்டுள்ள பொருட்களை சரியாக அறிவித்தல்
2. "அவர் சிலுவையில் அறையப்படவுமில்லை கொல்லப்படவுமில்லை. அவரை அல்லாஹ் தன் பக்கம் உயர்த்திக் கொண்டான். உலக முடிவின் அடையாளமாக அல்லாஹ் அவரை மீண்டும் உலகிற்கு அனுப்புவான்..."

04) 1. கதீஜா (ரழி), ஆயிஷா (ரழி), மய்மூனா (ரழி)
2. ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி)
3. இறையச்சமுடையவர், உண்மை பேசுபவர், குடும்ப உறவைப் பேணுபவர், அதிக தர்மம் செய்பவர், ஏழைகளை நேசிப்பவர்.

05) 1. ஸலாஹுத்தீன் அய்யூபி, ஸுல்தான் முஹம்மத் அல் பாதிஹ்
2. அரபு, பாரசீகம், துருக்கி, இலத்தீன், கிரேக்கம்
3. * கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கியமை
* எதிரிப்படைத் தளபதி நோய் வாய்ப்பட்ட போது தனது வைத்தியரை அனுப்பி சிகிச்சையளித்தமை
* எதிரிப்படைத் தளபதியின் குதிரை இறந்த போது உயர்தரமான குதிரையை அன்பளிப்புச் செய்தமை

06) 1. உலோபித்தனத்துக்கும் வீண்விரயத்துக்கும் இடைப்பட்ட நிலையே சிக்கனம் ஆகும்.
2. ஹலால் - மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட விடயங்கள்
ஹராம் - மார்க்கத்தில் தடுக்கப்பட்ட விடயங்கள்
3. சமூக நல்லிணக்கம் தொடர்பான பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும்
4. "தான் விரும்புவதை தன் சகோதரனுக்கும் விரும்பாதவரை ஒருவன் முஸ்லிமாக மாட்டான்"
மண்ணிலுள்ள மனிதர்களை நீங்கள் நேசித்தால் விண்ணிலுள்ள இறைவன் உங்களை நேசிப்பான்."

07) 1. பௌத்த சமயம், இந்து சமயம், இஸ்லாமிய சமயம் கிறிஸ்தவ சமயம்
2. புத்த பெருமான்
3. தைப்பொங்கல், தீபாவளி, நவராத்திரி
4. சாட்டையால் அடித்தார்கள்
முள்முடி தரித்து சிலுவை சுமந்தவராய் சிலுவையில் அறைந்தார்கள்.